செய்தி வெளியீடு எண்: 899 நாள்: 22/10/2008

**<u>செய்தி வெளியீடு – 22.10.2008</u>**

**<u>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்கள்<br>5 ஆயிரத்து 904 பேருக்கு<br>2 கோடியே 7 இலட்சம் ரூபாய் போனஸ்</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் ஆணை</u>**

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்களில் மாதம் 5300 ரூபாய் ஆரம்ப சம்பள விகிதமும், அதற்குக் குறைந்த சம்பள விகிதங்களும் கொண்ட பதவிகளில் பணிபுரியும் “சி” மற்றும் “டி” பிரிவுப் பணியாளர்களுக்குப் போனஸ் சட்டத்தின்படி 10 ஆயிரம் ரூபாய் என்ற சம்பள உச்சவரம்பிற்கு விலக்களித்து 2007–2008ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.**

**இதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.**

**இந்த ஆணையின்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் ஏறத்தாழ 5 ஆயிரத்து 904 பணியாளர்களுக்கு மொத்தம் 2 கோடியே 7 இலட்சம் ரூபாய் போனஸ் கிடைக்கும்.**

.............................................................................

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9